**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.277/2023**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் நாள் வியாழன் கிழமை ம.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கணபதி | த/பெ.: | பாலசுப்பிரமணியன் |
| கிராமம்: | பெரிய சிங்களாந்தி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | பூக்கடை தொழிலாளி |
| வயது: | 44 | முகவரி: | பெரிய சிங்களாந்தி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 28.08.2025

**முதல் விசாரணை:**

நான் இந்த மனுவில் மனுதாரர்கள் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிருபன வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

**2, 3 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

விபத்து நடந்த தேதி எனக்கு தெரியுமா என்றால் 10.08.2021–ல். விபத்து நடந்த இடம் திருத்துறைப்பூண்டியில் உள்ள ஆரியா உணவகம் அருகில். விபத்து நடந்த இடத்திற்கும், எனது கடைக்கும் சுமார் 300 மீ தூரம் இருக்குமா என்றால் 4 கடைகள் தள்ளி நடந்தது. நான் பூக்கடையின் உள்ளே உட்கார்ந்து பூக்கட்டினேன் என்றால் சரியல்ல. கடையின் வெளிப்புறத்தில் உட்கார்ந்து தான்

பூக்கட்டி வருகிறேன். விபத்து நடந்த ரோடானது தெற்கு வடக்கு ரோடு என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் 6679. மேற்கண்ட வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்ததா என்றால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தது. விபத்தில் இறந்து போன நபர் சாலையில் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி கடந்து சென்றார் என்றால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையின் குறுக்கே கடந்து சென்றார். இறந்து போன நபருக்கு வயது 80 இருக்குமா என்றால் அதற்கும் குறைவாக தான் இருக்கும். இறந்து போன நபர் வயதானவர் என்றும், சரியாக கண் பார்வை இல்லாமல் தனக்கு தானே சாலையில் குறுக்கே நடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நடந்து எவ்வளவு நாள்கள் கழித்து அடிப்பட்ட நபர் இறந்துவிட்டார் என்றால் 5 நாள்கள் கழித்து இறந்து விட்டார். விபத்தில் இறந்து போன நபரை எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. இறந்து போன நபரின் வீட்டிற்கு நான் தான் தகவல் கொடுத்தேன். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதின்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக வேறு நீதிமன்றத்தில் ஏதேனும் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன். எந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன் என்றால் திருத்துறைப்பூண்டியில் உள்ள குற்றவியல்

நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன். அந்த குற்ற வழக்கில் என்ன முடிவு ஏற்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சம்பவ நாளில் பூக்கடையில் உள்ளே உட்கார்ந்து பூக்கட்டிக்கொண்டு இருந்தேன் என்றும், கடையின் உரிமையாளர் தான் கடையின் வெளியில் உட்கார்ந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார் என்றும், நான் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதின் படி சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.